பதிவுத்துறைத்தலைவர் அலுவலகம்,

சென்னை –28.

சுற்றறிக்கை

ந.க.எண். 20470 /சி1/2020, நாள் 20.08.2020.

பொருள்: ஆவணப் பதிவு – பதிவுக்கு தாக்கலாகும் ஆவணங்களில் ஆவணதாரர்களின் கைபேசி எண் குறிப்பிடுதல்– இணையவழி ஆவணப் பதிவு நடைமுறைப்படுத்தப்பட்டபின் ஆவணத்தின் பல்வேறு நிலை நடவடிக்கைகள் குறித்து குறுஞ்செய்தி அனுப்புதல் நடைமுறை – ஆவணத்தில் எழுதிப் பெறுபவரின் கைபேசி எண் மட்டும் குறிப்பிடுவதற்கு சுற்றறிக்கை பிறப்பிக்கப்படுகிறது.

பார்வை:
1. பதிவுத்துறைத்தலைவர் சுற்றறிக்கை எண்.2806/சி/2013, நாள்.30.01.2013
2. பதிவுத்துறைத்தலைவர் சுற்றறிக்கை எண்.55969/சிஎஸ்1/2013–1, நாள்.23.01.2018.
3. பதிவுத்துறை செய்தி வெளியீடு, நாள் 05.12.2018.

******

பார்வை 1–ல் கண்ட சுற்றறிக்கையின்படி ஸ்டார் 2.0 இணையவழி மூலம், ஆவணம் தொடர்பான விபரங்களை உள்ளீடு செய்பவர்கள், எழுதிப் பெறுபவரின் (claimant) அலைபேசி எண்ணை உள்ளீடு செய்யாமல் "Online" –ல் ஆவணம் உருவாக்குபவர்களின் அலைபேசி அல்லது ஆவணத்தில் சம்பந்தப்படாத நபர்களின் அலைபேசி எண்ணை உள்ளீடு செய்யும் நடைமுறை கடைபிடிக்கப்படுவதாக தெரிய வருகிறது. இதனால் ஆவணப் பதிவின் நிலை தொடர்பாக அலைபேசியில் அனுப்பப்படும் உடனடி (instant) குறுஞ்செய்திகள், உரிய நபரை சென்றடையாமல் வேறு நபரின் அலைபேசி எண்ணுக்கு செல்லும் நிலை உருவாகிறது. எனவே அலைபேசி வழி செய்தி அனுப்பப்படுவதன் நோக்கம், பூர்த்தியடையாத நிலை ஏற்படுகிறது.

2. இதனைத் தவிர்த்திடவும் பொது மக்களுக்கு சீரிய முறையில் பதிவுத்துறையின் சேவைகள், வெளிப்படைத்தன்மையுடன் சென்றடையவும், இனி வருங்காலங்களில் –

Verified RealEstate ™

இணையவழி ஆவணம் தொடர்பான விபரங்களை உள்ளீடு செய்யும் நிகழ்வில் , ஆவணம் உருவாக்குபவர்களின் அல்லது ஆவணம் சம்பந்தப்படாத நபர்களின் அலைபேசி எண்ணை உள்ளீடு செய்யப்படுவது கண்டிப்பாக தவிர்க்கப்பட வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது. **ஆவணம் எழுதி பெறுபவரின் சரியான அலைபேசி எண் மட்டும் தவறாது உள்ளீடு செய்யப்படுவதை** கண்காணிக்குமாறு பதிவு அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது. இது குறித்து பொது மக்கள் மற்றும் ஆவண எழுத்தர்கள் நன்கு அறியும் வண்ணம் அலுவலக அறிவிப்பு பலகையில் உரிய அறிவிப்பு செய்யப்படவேண்டும்.

3. மேலும் பதிவுக்குத் தாக்கல் செய்யப்படும் ஆவணங்களிலும் எழுதிப் பெறுபவரின் அலைபேசி எண் மட்டும் குறிப்பிட்டு தாக்கல் செய்திடுமாறு சம்பந்தப்பட்ட ஆவணதாரர்களுக்கு அறிவுறுத்துமாறு பதிவு அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இது குறித்து பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் தனியே செய்தி வெளியீடு கொடுக்கப்பட்டுள்ளது.

4. மேற்குறித்த அறிவுரைகள் – நடைமுறைப்படுத்தப்படுவதை; திடீராய்வின் போது துணைப்பதிவுத்துறைத்தலைவர்களால் கண்காணிக்கப்பட வேண்டும் எனவும் அறிவுறுத்தப்படுகிறது.

\ஒம்/-20.08.2020.

பதிவுத்துறைத்தலைவர்

/ ஆணையின்படி /

கூடுதல் பதிவுத்துறைத்தலைவர்

(முத்திரை மற்றும் பதிவு)

பெறுநர் :

1. அனைத்து துணைப்பதிவுத்துறைத்தலைவர்கள்.
2. அனைத்து மாவட்டப்பதிவாளர்கள். (நிர்வாகம் & தணிக்கை)
3. அனைத்து சார்பதிவாளர்கள்.

நகல்:

1. அனைத்து உயர் அலுவலர்கள்,

பதிவுத்துறைத்தலைவர் அலுவலகம்.

Verified RealEstate

2. பதிவுத்துறைத்தலைவரின் நேர்முக எழுத்தர்.

3. அரசு முதன்மை செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை,
தலைமைச் செயலகம். – தகவலுக்காக அனுப்பப்படுகிறது.

4. நேர்முக உதவியாளர் (தனி),
மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் அவர்கள்.

5. முக்கிய ஆணைக் கோப்பு.

6. கணினி மென்பொருள் பிரிவு. – இணையதளத்தில் மேலேற்றம் செய்வதற்கு.

Verified RealEstate™